# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 406/2012**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **நடேசன் ஜம்புலிங்கம்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **ஜம்புலிங்கம்** | தொழில் | .. | **Scientist** |
| வயது | .. | 68 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **தேவண்ணகவுண்டனூர்** | நாள் | .. | 16.12.2022 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2022-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு. நடேசன் ஜம்புலிங்கம் த/பெ. ஜம்புலிங்கம் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து இருக்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 26.10.1992 தேதியிட்ட கிரையப் பத்திரம் அசல் ஆவணம் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) 28.10.1994 தேதியிட்ட மனைவரி தோராயப் பட்டா அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3) 02.02.2010 தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 11.03.2010 தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர், சங்ககிரி கிராமம் வழங்கிய சான்று (மேலொப்பமிடப்பட்டது) அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.ஆ.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / நடேசன் ஜம்புலிங்கம்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.